பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை
10 02 2025 **MONDAY** 7 15 **PM**
வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. பிரான்ஸ் மற்றும் அமெரிக்காவுக்கு தாம் மேற்கொள்ளும் அரசுமுறைப் பயணம் இரு நாடுகளுக்கு இடையேயான உறவை வலுப்படுத்த உதவிடும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. மாநிலங்களவையில் பட்ஜெட் மீதான விவாதம் இன்று தொடங்கியது.

3. பிரதமரின் வங்கிக் கணக்கு திட்டத்தின் கீழ், 54 கோடிக்கும் மேற்பட்ட கணக்குகள் தொடங்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

4. சர்வதேச காஃபி கண்காட்சி துபாயில் இன்று தொடங்கியது..

5. தேசிய விளையாட்டுப் போட்டிகளில் தமிழகம் இன்று இரண்டு தங்கப்பதக்கங்களை வென்றது.

**<<<<<<>>>>>>**

தேர்வு தொடர்பான அச்சத்தை களையும் வகையில் பிரதமர் திரு. நரேந்திர மோடி, மாணவர்களுடன் கலந்துரையாடியதற்காக நன்றி தெரிவித்துக் கொள்வதாக மத்திய கல்வியமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாணவர்கள் நலனில் பிரதமர் அக்கறையுடன் உள்ளார் என்பதையே இது உணர்த்துவதாக கூறியுள்ளார்.

இதற்கிடையே, பிரதமருடனான கலந்துரையாடலில் தாம் பங்கேற்றது மிகுந்த மகிழ்ச்சியளிப்பதாக உள்ளது என்று புதுச்சேரியைச் சேர்ந்த மாணவி தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - மாணவர் 29 செகண்ட்ஸ்)

**<<<<<<>>>>>>**

பிரான்ஸ் மற்றும் அமெரிக்காவுக்கு தாம் மேற்கொள்ளும் அரசுமுறைப் பயணம் இரு நாடுகளுக்கு இடையேயான உறவை வலுப்படுத்த உதவிடும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியிலிருந்து புறப்படுவதற்கு முன்னர் தமது பயணம் குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பாரிஸில் நடைபெறவுள்ள செயற்கை நுண்ணறிவு தொடர்பான உச்சிமாநாட்டிற்கு அந்நாட்டு அதிபர் திரு. இமானுவேல் மேக்ரோன் இணைந்து தலைமை வகிக்கவுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

**Marscille**-ல் இந்திய தூதரகத்தையும் திறந்து வைக்கவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து அமெரிக்கா சென்று, அந்நாட்டு அதிபருடன் பேச்சு நடத்தவுள்ளதாகவும் பிரதமர் கூறியுள்ளார்.

**<<<<<<>>>>>>**

மாநிலங்களவையில் பட்ஜெட் மீதான விவாதம் இன்று தொடங்கியது.

விவாதத்தை தொடங்கி வைத்துப் பேசிய காங்கிரஸ் உறுப்பினர் திரு. ப. சிதம்பரம், மத்திய அரசின் உற்பத்தியுடன் இணைந்த ஊக்கத்தொகை வழங்கும் திட்டம் உரிய பலன்களை அளிக்கவில்லை என்று கூறினார்.

வேலைவாய்ப்பின்மை பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான அம்சங்கள் பட்ஜெட்டில் இடம்பெறவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

அப்போது குறுக்கிட்டுப் பேசிய அவை முன்னவர் திரு. ஜெபி. நட்டா, உற்பத்தி துறையின் வளர்ச்சிக்காக மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளை பட்டியலிட்டார்.

இந்த விவாதத்தில் பங்கேற்றுப் பேசிய பிஜேபி உறுப்பினர் திரு. தினேஷ் சர்மா, மகளிர் மற்றும் நலிவடைந்த பிரிவினர் நலனுக்கான பல்வேறு திட்டங்கள் இந்த பட்ஜெட்டில் இடம்பெற்றிருப்பதாக தெரிவித்தார்.

திமுகவின் திரு. திருச்சி சிவா பேசுகையில், மாநிலங்களுக்கான நிதியை மத்திய அரசு விடுவிக்கவில்லை என்று குறை கூறினார்.

மக்களவையில் பட்ஜெட் மீதான விவாதம் இன்று மீண்டும் தொடங்கியது. பல்வேறு கட்சிகளின் உறுப்பினர்கள் இதில் பங்கேற்று பேசினர்.

**<<<<<<>>>>>>**

பிரதமரின் வங்கிக் கணக்கு திட்டத்தின் கீழ், 54 கோடிக்கும் மேற்பட்ட கணக்குகள் தொடங்கப்பட்டுள்ளதாக மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

மக்களவையில் கேள்வி நேரத்தின் போது இதனை தெரிவித்த அவர், இதில் 55 சதவீத வங்கிக் கணக்குகளை மகளிர் கொண்டிருப்பதாக குறிப்பிட்டார்.

வங்கிக் கணக்கு இல்லாத அனைவருக்கும் அதனை தொடங்க தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் திருமதி. நிர்மலா சீதாராமன் தெரிவித்தார்.

**<<<<<<>>>>>>**

நாடுமுழுவதும் புதிய விமான நிலையங்களை ஏற்படுத்துவதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக சிவில் விமான போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. **Kinjarapu Rammohan Naidu** தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் கேள்வி நேரத்தின் போது இதனை தெரிவித்த அவர், உதான் திட்டத்தின் கீழ், புதிய விமான நிலையங்கள் ஏற்படுத்தப்படவுள்ளதாக கூறினார்.

ட்ரோன்களை உற்பத்தி செய்யும் உள்நாட்டு நிறுவனங்களுக்கு ஊக்கமளிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதற்கான திட்டத்திற்கென 120 கோடி ரூபாய் நிதிஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

**<<<<<<>>>>>>**

இனி மகா கும்பமேளா குறித்த செய்திகள் . . . .

*(சவுண்ட் பைட் - **Song** – 8 நொடிகள்)*

உத்தரப்பிரதேசம், பிரயாக்ராஜில் நடைபெற்றுவரும் உலகின் மாபெரும் ஆன்மிக திருவிழாவான மகா கும்பமேளாவையொட்டி, புனித நீராடுபவர்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

இன்று ஒரு கோடிக்கும் மேற்பட்டோர் புனித நீராடியுள்ளதாகவும், இதுவரை 43 கோடியே 57 லட்சம் பேர் புனித நீராடியுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

நேற்று மட்டும் 330 ரயில்கள் இயக்கப்பட்டு, 12 லட்சத்திற்கும் மேற்பட்டோர் பயணம் செய்துள்ளனர்.

பிரயாக்ராஜில் உள்ள எட்டு ரயில் நிலையங்களில் கண்காணிப்பு கேமராக்கள் உள்ளிட்ட அதிநவீன வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

ரயில்கள் ரத்து செய்யப்படுவதாக வெளியாகும் வதந்திகளை பொதுமக்கள் நம்ப வேண்டாம் என்றும் ரயில்வே கேட்டுக் கொண்டுள்ளது.

*(சவுண்ட் பைட் - **Song** – 8 நொடிகள்)*

<<<<<<>>>>>>

நாடாளுமன்றம் மற்றும் சட்டப்பேரவைகளின் நடவடிக்கைகள் சுமுகமாக நடைபெறுவதன் அவசியத்தை மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா வலியுறுத்தியுள்ளார்.

மகாராஷ்ட்டிர சட்டப்பேரவைக்கு புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர்களுக்கு புதுதில்லியில் நடைபெற்ற பயிற்சி முகாமில் பங்கேற்று அவர் பேசினார்.

அவை நடவடிக்கைகளை உறுப்பினர்கள் திட்டமிட்டு முடக்குவது ஜனநாயகத்திற்கு உகந்ததல்ல என்றும் அவர் தெரிவித்தார்.

மக்கள் பிரதிநிதிகள் அரசியல் சாசனத்தை முழுமையாக அறிந்து கொள்ள வேண்டியது அவசியம் என்றும் திரு. ஓம் பிர்லா கூறினார்.

<<<<<<>>>>>>

ஜம்மு கஷ்மீர் முதலமைச்சர் திரு. உமர் அப்துல்லா, மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷாவை இன்று புதுதில்லியில் சந்தித்து பேசினார்.

ஜம்மு கஷ்மீர் வளர்ச்சிக்கான திட்டங்கள் குறித்து இந்த சந்திப்பின் போது விவாதிக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<>>>>>>

மேற்குவங்க மாநில சட்டப்பேரவை கூட்டத்தொடர் ஆளுநர் திரு. சி.வி. அனந்தபோஸ் உரையுடன் இன்று தொடங்கியது.

மேற்குவங்கத்தின் பொருளாதார வளர்ச்சி சீராக உள்ளதாக ஆளுநர் தெரிவித்தார்.

அம்மாநில அரசின் பல்வேறு சாதனைகள் ஆளுநர் உரையில் இடம்பெற்றன.

இதற்கிடையே, ஆளுநர் உரை ஏமாற்றம் அளிப்பதாக பிஜேபி கருத்து தெரிவித்துள்ளது.

கொல்கத்தாவில் செய்தியாளர்களிடம் பேசிய எதிர்க்கட்சித்தலைவர் திரு. **Suvendu Adhikari** நிதி மேலாண்மையை மேற்குவங்க அரசு முறையாக கையாளவில்லை என்பது ஆளுநர் உரையில் வெளிப்பட்டுள்ளதாக கூறினார்.

**<<<<<<>>>>>>**

மேற்குவங்கத்தில் பள்ளிக்கல்வித்துறையில் காலியாக இருந்த 25 ஆயிரம் பணியிடங்கள் பூர்த்தி செய்ததை ரத்து செய்து, அம்மாநில உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்பினை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டு மனுமீதான தீர்ப்பினை உச்சநீதிமன்றம் ஒத்திவைத்துள்ளது.

மேற்குவங்க அரசு மற்றும் பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்ட தனிநபர்கள் சார்பில் இந்த மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டது.

**<<<<<<>>>>>>**

ஆந்திர மாநில சட்டப்பேரவை கூட்டத்தொடர் வரும் 24ஆம் தேதி தொடங்குகிறது.

அன்றைய தினம் அலுவல் ஆய்வுக்குழு கூடி இக்கூட்டத்தை எத்தனை நாட்களுக்கு நடத்துவது என்பது குறித்து முடிவு செய்யும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**<<<<<<>>>>>>**

சர்வதேச காஃபி கண்காட்சி துபாயில் இன்று தொடங்கியது.

நாளை மறுநாள்வரை நடைபெறவுள்ள இந்த கண்காட்சியில் இந்தியாவின் சார்பில் காஃபி வாரியத்தின் அரங்கும் இடம்பெற்றுள்ளது.

**<<<<<<>>>>>>**

சென்னை அகில இந்திய வானொலியின் மாநில செய்திப்பிரிவு வழங்கும் ‘செய்திச்சுடர்’ நிகழ்ச்சியில், மகா கும்பமேளா குறித்து ஆன்மிக சொற்பொழிவாளர் திரு சாமிநாதனுடன், எமது நெறியாளர் சுமித்ரா ரத்னம் பங்கேற்ற நேர்காணல் இன்று இடம் பெறுகிறது.

ஒருங்கிணைந்த அலைவரிசையில் இரவு மணி 9.15-க்கு ஒலிபரப்பாகும் இந்த நிகழ்ச்சியை மாநிலத்தில் உள்ள அனைத்து வானொலி நிலையங்களும் அஞ்சல் செய்யும்.

**<<<<<<>>>>>>**

தேசிய விளையாட்டுப் போட்டிகளில் தமிழகம் இன்று 2 தங்கப்பதக்கங்களை வென்றது.

உத்ராகண்டில் நடைபெற்று வரும் இப்போட்டியின் வாள் வீச்சு மகளிர் பிரிவில் பவானி தேவியும் ஆடவர் பிரிவில் **Bibish**-ம் தங்கப்பதக்கம் வென்றனர்.

**<<<<<<>>>>>>**

ஆசிய கோப்பை பாரா வில்வித்தைப் போட்டியில் இந்தியா இன்று இரண்டு தங்கம், ஒரு வெள்ளி, மூன்று வெண்கலப்பதக்கங்களை வென்றது.

தாய்லாந்தில் நடைபெற்ற இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவில் சரிதாவும், ஆடவர் ஒற்றையர் பிரிவில் ஷ்யாம்சுந்தர் சாமியும் தங்கப்பதக்கம் வென்றனர்.

மற்றொரு மகளிர் ஒற்றையர் பிரிவில் பூஜா வெள்ளிப்பதக்கம் வென்றார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவில் **Adil Mohammed Nazir Ansari-**யும் ராகேஷ் குமாரும் மற்றும் ஹர்வீந்தர் சிங்கும் வெண்கலப்பதக்கம் வென்றனர்.

இப்போட்டியில் இந்தியா 6 தங்கம், 3 வெள்ளி, 3 வெண்கலப்பதக்கம் வென்றுள்ளது.

**<<<<<<>>>>>>**

தமிழக அணிக்கு எதிரான ரஞ்சிக் கோப்பை கிரிக்கெட் போட்டி காலிறுதி ஆட்டத்தின் மூன்றாம் நாளான இன்று, ஆட்டநேர இறுதியில் விதர்பா அணி இரண்டாவது இன்னிங்ஸில் 5 விக்கெட் இழப்புக்கு 169 ரன் எடுத்துள்ளது.

நாக்பூரில் நடைபெற்று வரும் இப்போட்டியில் தமிழக அணி முதல் இன்னிங்ஸில் 225 ரன்னுக்கும், விதர்பா அணி முதல் இன்னிங்ஸில் 353 ரன்னுக்கும் ஆட்டமிழந்தன.

**<<<<<<END>>>>>>**